**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**S.T.C. No. 44/2020 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மைதீன் | த–பெ | சேகுராவுத்தர் |
| ஊர்: | : | பாதரக்குடி | சமயம்: | |
| வயது: | : | 72/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓட்டுனர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.10.2025**

**எதிரிகள் ஆஜர் இல்லை மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

----------------------------------------------------------------------------------------------------

**<u>எதிரிகள் தரப்பில் மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில் குறுக்கு விசாரணை.</u>**

1) என்னை போலீசார் எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் பிரச்சனை முடிந்த பின்னர் விசாரணை செய்தார்கள். எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் என் வீட்டில் வைத்து விசாரணை செய்தார்கள். நான் இடப்பிரச்சனை சம்பந்தமாக பேசுவதற்காக அ.சா.1ன் வீட்டிற்கு சென்றேன். என்னுடன் யாரும் வரவில்லை. போலீசார் விசாரணையில் அ.சா.1ற்கு நெற்றி, கைகள், முழங்கால்கள், வலது கண் ஆகியவற்றில் காயம் ஏற்பட்டதாக சொன்னேன். போலீசார் விசாரணையில் உஸ்மானை எதிரிகள் கொலை மிரட்டல் செய்த விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். 10 அடையாளம் தெரியாத நபர்கள் எந்த வாகனத்தில் வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி விபரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், ஆ.சா.1 கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ .சா1ற்றும் அவரது தம்பிகளுக்கும் இடையே வீடு சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்றாலும் அதன் காரணமாக எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.11.04 16:01:34 +0530